அருள்தந்தை யோவான் பப்திஸ்து புத்தாரி. நீலகண்டனுக்கு 9 மாதங்களாக மறைக்கல்வி கற்றுத் தந்தார் புத்தாரி. அப்போது, கத்தோலிக்கரிடையே நிலவிவந்த சாதியுணர்வைக் கண்டு, தான் "திருமுழுக்கு பெற்றபின் இத்தகு சாதிவெறிக்கு உள்ளாகமாட்டேன்" என்றும் "சாதி அமைப்பை எதிர்ப்பேன், உண்மைக் கிறிஸ்தவனாய் இருப்பேன்" என்றும் உறுதிபூண்டார். புத்தாரி நீலகண்டனுக்கு 1745ஆம் ஆண்டு மே 14-இல் திருமுழுக்கு கொடுத்தார். திருமுழுக்கில் அவருக்குச் சூட்டப்பட்ட பெயர்தான் "தேவசகாயம்". இது "லாசரஸ்" (Lazarus) என்ற பெயரின் தமிழ் மொழியாக்கம் ஆகும்.

## சாட்சிய வாழ்வும் நற்செய்திப் பணியும்:

திருமுழுக்கு நீலகண்டனை முற்றிலும் மாற்றியது. அன்பும் மகிழ்ச்சியும் புதுக்கிறிஸ்தவர் தேவசகாயத்தை ஆட்கொண்டன. இவரது சாட்சிய வாழ்வும் சான்றுரையும் பலரை மாற்றியது. அவர்களில் அவரது மனைவி பார்கவி அம்மாளும் ஒருவர். திருமுழுக்கில் அவரது பெயர் "ஞானப் பூ" என்பது. மறைசாட்சி தேவசகாயம் தமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் சாதி அமைப்பினை எதிர்த்து சாதி ஒழுங்குகளை மீறல் செய்தார். தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட கிறிஸ்தவர்களிடம் உடன்சகோதரனாக நெருங்கிப் பழகினார். சாதியச் சின்னங்களையும் மூடநம்பிக்கையையும் வீசி எறிந்தார்.

## எதிர்ப்பும் கைதும் வன்கொடுமையும்:

அரசனின் மதத்தைவிட்டு மாறியதும், சாதிக் கட்டுப்பாடுகளை மீறல் செய்ததும் குல நிந்தையாகவும், அரச துரோகமாகவும் கருதப்பட்டது. எனவே அரசனின் ஆணைப்படி 1749, பெப்ரவரி 23ஆம் நாள் மறைசாட்சி தேவசகாயம் கைது செய்யப்பட்டார். அதே வேளையில் திருவிதாங்கூர் அரசு முழுவதிலும் கிறிஸ்தவர்களுக்குக்கெதிராக வன்முறை அறிவிக்கப்பட்டது. மறைசாட்சி மக்களுக்கு எச்சரிக்கையாக நாட்டின் பல பகுதிகளுக்கும் இழுத்துச் செல்லப்பட்டார். எருமைமீது அமர்த்தப்பட்டு, எருக்கல மாலை அணிவிக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சம் கிறிஸ்தவர் இருந்த இடங்களுக்கெல்லாம் கொண்டு செல்லப்பட்டார். மக்கள் முன்னிலையில் அடித்து உதைக்கப்பட்டார். அவரது உடலில் ஏற்பட்ட காயங்களிலும், நாசித்துவாரங்களிலும் மிளகுப்பொடி தேய்க்கப்பட்டது. இத்துன்பகாலத்தில் மறைசாட்சியைப் பார்த்தவர்கள் எல்லாரும் அவரது மனஉறுதியையும் அன்பையும் மன்னிக்கும் குணத்தையும் நற்செய்திக்காக எந்தத் துன்பத்தையும் தாங்கத் தயாராக இருந்ததையும் பார்த்துப் பரவசமானார்கள். மூன்றாண்டுகளாக அவருக்கு இழைக்கப்பட்ட